Stadt Zürich
Umwelt- und
Gesundheitsschutz

# ஜெர்மன் கரப்பான் பூச்சி

## மிக முக்கியம்

சுகாதாரத்திற்குக் கேடுண்டாக்கும் ஜெர்மன் கரப்பானானது, பொருட்களுடன் சேர்ந்து உள்ளே இழுக்கப்படக்கூடும்.

- சூடான கட்டடங்களில் அது பெருகி, வியாதியை உண்டாக்குகின்ற கிருமிகளைத் தனது கழிவினாலும் வாந்தியினாலும் உணவின் மீதும் மக்கள் மீதும் பரப்பக்கூடும்.
- இரவு நேரங்களில் அது சுறுசுறுப்பாக செயல்பட்டு, சூடான, ஈரப்பதமுள்ள இடங்களை விரும்புகிறது. .
- சுகாதாரமற்ற காரணத்தால் அல்ல,இதன் தாக்குதல் யாருக்கும் நேரிடலாம்.
- பூச்சியினால் தாக்குதல் ஏற்பட்டால் இத்துறையில் வலிமையுள்ள பூச்சிக்கொல்லி மருந்தடித்து இந்த தாக்குதலை ஒழிக்க முடியாது.
- உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் பூச்சிகளை சேகரித்து ஒரு நிபுணரின் அபிப்பிராயத்தை எப்போதும் கேட்கலாம்.

## தோற்றம்

- வளர்ச்சியடைந்தது 9-15 மி.மி. நீளத்தில், பழுப்பு நிறமாகவும் தட்டையாகவும், நீண்ட உணர்ச்சி- உறுப்புடையதாகவுமிருக்கும்.
- கரப்பான் பூச்சிகளின் கழுத்துப்பட்டையிலிருக்கும் இரு நீளவாக்கு கருப்பு கோடுகளே இவற்றை அடையாளங் காட்டுகின்ற அம்சமாகும். தீங்கில்லாத சன்ம பூமி கரப்பான் பூச்சிகளிலிருந்து இது வேறுபடுத்தும்.
  காட்டு கரப்பான் பூச்சிக்கு இது கிடையாது.
- இதற்கு பறக்க முடியாது.



- மலம் - சிறு கரிய தானியம் போல், அறைத்த காப்பிக் கொட்டை மாதிரி தெரியும்.



கரப்பான் பூச்சியின் மலமும், விட்டுச்சென்ற முட்டைக்கூடும், உருவப்படம்: யு.ஜிசி

- சிறு பிராணிகள(இளம்பூச்சி): வயதுக்கேற்ப, 2 முதல் 9 மி.மி. நீளமாக, இறக்கையில்லாமல், வளர்ச்சியடைந்தவற்றை விட கருமையாக இருக்கும். ஆனால் இரண்டும் ஒன்று போலவே இருக்கும்.:



வளர்ச்சியடைந்த ஜெர்மன் கரப்பான் பூச்சி (இடது புறம்)அதனுடன் இரண்டு விதமான இளம் கரப்பான் பூச்சிகள். உருவப்படம் -யு.ஜி.சி

## வாழ்க்கை முறை

- சுவிட்சர்லாந்தில் சூடான கட்டிடங்களிலும் அடுக்கு அறைகளில் மட்டுமே, குறிப்பாக சமையலறையிலும் குளியலறையிலும்.
- இரவு நேரங்களில் சுறுசுறுப்பாக இயங்கும். வெளிச்சமிருந்தால் விரைவாக ஓடி, இடுக்குகளில் ஒளிந்து கொள்ளும்.
- விரும்பித் தேர்ந்தெடுப்பது இருட்டான ஒளியு மிடங் களானவை: குளிர்சாதனப்பெட்டி, பாத்திரம் கழுவும் சாதனம், காப்பி போடும் இயங்திரம் போன்ற சூடும் ஈரப்பதமுமானவை.
- நிர்ப்பந்தமின்றி எல்லா உணவுகளையும் உட்கொள்ளும்.(உ-ம்) குப்பைத் தொட்டியிலுள்ள கழிவுப் பொருட்கள், ரொட்டித்துண்டுகள், எண்ணெய்ப் பசையுள்ள துணுக்குகள்.
- மிக சுத்தமான குடியிருப்புகளில் கூட இது காணப்படும்.

உருவாகுதல்

- சராசரி 36 முட்டைகள் அடங்கிய முட்டைக்கூடுகளைப் பெண் பூச்சிகள் இடுகின்றன.
- முட்டை தொடங்கி முழு வளர்ச்சி கரப்பான் பூச்சியாகும் வரை 24° செல்சியசில் சுமார் 100 நாள் எடுக்கிறது.

பரவ விடுதல்

- தற்காலம் உலகெங்கும் இது பரவுகிறது.
- ஹோட்டல்களிலும் உணவு விடுதிகளிலும் சமையல் துறைகளிலும், கடை மையங்களிலும், குளியலறைகள், மற்றும் வீடுகளிலும் கூட இவை காணப்படுகின்றன.

கரப்பான் பூச்சிகள் எவ்வாறு ஒரு வீட்டிற்குள் வருகின்றன?

- விடுமுறையின் போதுள்ள பயணப்பெட்டி மூலம், ஏற்கனவே உபயோகித்த தட்டுமுட்டுச் சாமான்கள் மூலம், கட்டி கொண்டு வரப்படும் பொருட்கள் மூலம், அல்லது வேலை ஸ்தலத்திலிருந்து எதிர்பாராத விதமாக இழுத்து வரப்படுகின்றன.
- ஒரு முறை வீட்டிற்கு உள்ளே வந்து விட்டால், அவை காற்றோட்ட(வெண்டிலேஷன்) கம்பி வடம் மூலமாகவோ, மின்சாரம் செல்லும் கம்பி வடம் மூலமாகவோ நடந்து ஒரு அடுக்குமாடிக்கூடத்திலிருந்து அடுத்த அடுக்குமாடிக்கூடத்திற்குப் போய்விடும்.
- சாதாரணமாக, பல வீடுகளுக்கோ அல்லது ஒரு முழு வீட்டிற்கோ கரப்பான் பூச்சிகளால் தொல்லைகள் உண்டு.

## முக்கியத்துவமும் சேதமும்

- கரப்பான் பூச்சிகள் ஒருபோதும் அழுக்கிலிருந்து உற்பத்தியாவதில்லை. மற்றும் சுத்தமின்மை இதற்கு அறிகுறியல்ல.
- கரப்பான் பூச்சிகள் சுகாதாரமற்றவை மற்றும் நோய்க்கிருமிகளை பரவச்செய்ய கூடியவை. ஆகையால் அவற்றை எதிர்க்க வேண்டும்.
- அவற்றின் கழிச்சலும் தோலின் மிச்சம் மீதிகள் ஒவ்வாமையை உண்டாக்கக்கூடும்.

## எதிர்த்து போராடுதல்

- கரப்பான் பூச்சிகள் தாமாகவே மறைந்து போவதில்லை.
- சுத்தப்படுத்துவதால் பிரயோஜனமில்லை.
- உங்கள் அயலட வீட்டுக்காரரிடம் கரப்பான் பூச்சிகளால் பிரச்சினையுண்டா என்று கேட்டு, இந்த தாக்குதலைப்பற்றி உங்கள் வீட்டு நிருவாகத்திடம் புகார் செய்யுங்கள்.
- பூச்சிக்கொல்லிகளால் நீங்களே இவற்றை எதிர்க்க முற்பட வேண்டாம். இதனால் கரப்பான் பூச்சிகள் அடுக்கு மாடி முழுவதிலுமோ, வீட்டிலோ பரவக்கூடும்.
- கரப்பான் பூச்சிகளை ஒரே சமயம் வீடு முழுவதும் எதிர்த்து போராட வேண்டும்.
- கூட்டாட்சி உரிமையுடன் வரையறுக்கப்பட்ட பூச்சி கட்டுப்பாடு நிறுவனம் மட்டுமே இதை செய்ய முடியும்.
- குறிக்கோள்: வீடு முழுவதும் முற்றிலுமான ஒழிப்பு.

## செலவுகளுக்கு யார் பொறுப்பெடுப்பார்களா?

- அடுக்குமாடிக்கூடத்திலில் ஒரு வீட்டிற்கு மேல் தாக்கப்பட்டால் அதை கட்டுப்படுத்த ஒரு குறிப்பிட்ட தனித்துறையை வீட்டு நிர்வாகம் நியமிக்க வேண்டும். கரப்பான் பூச்சிகள் இருக்கிறதாவென்று எல்லா குடியிருப்புகளும் சோதிக்கப்பட வேண்டும்.
- வாடகைக்கு இருப்பவர் மேல் செலவுகள் திணிக்கப்பட கூடாது. *அழிவு செய்யும் பூச்சிகளின் தாக்குதலைப் பற்றிய சட்ட நிலையை* எங்கள் தகவல் செய்தித்தாளில் பாருங்கள். குடியிருப்பு ஆதனத்திற்குரிய சட்ட நிலைப்பாடானது கட்டுப்பாட்டு சட்டத்தொகுப்பின் விதி 256, 257 எ.ஃ.ப், ஜி, ஹெச், 258, மற்றும் 259 மூலம் ஒழுங்குப்படுத்தப்படுகிறது.

**உங்களுக்கு நாங்கள் மேலும் உதவி செய்ய முடியும்.** எங்களைத் தொலைபேசி மூலம் அணுகுங்கள், அல்லது ஒரு மதிப்பீட்டிற்காக பூச்சிகளை அனுப்பவோ நேரில் கொண்டு வரவோ செய்யுங்கள். எங்கள் ஆலோசனை சூரிக் நகரவாசிகளுக்கு மட்டுமேஇலவசமான உண்டு.

பூச்சி கட்டுப்பாட்டு ஆலோசனை மையம்
இசபெல் லென்டா லியூஸர், டாக்டர் கெபி மியுலர், மார்க்கஸ் ஸ்மித்

Stadt Zürich
Umwelt- und Gesundheitsschutz
Fachstelle Schädlingsprävention
Eggbühlstrasse 23
8050 Zürich
T +41 44 412 28 38
ugz-schaedlingspraevention@zuerich.ch
stadt-zuerich.ch/schaedlingspraevention